**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 24/2025**
**Dated :02.06.2026**
**Deposition of witness for : P.W.4**

**List of Witness LW3 Examined as PW4 ( EyeWitness )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சித்ரா | வயது | : | 33 |
| கணவர் பெயர் | : | தங்கவேல் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | குட்ட குளவாய்ப்பட்டி | தொழில் | : | **விவசாயம்** |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**
**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரி பிரவு என்பவரை எனக்கு தெரியும். அ.சா.1 முத்துகுமாரை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள் ஆவார். கடந்த 16.04.2023 ஆம் தேதி எங்கள் ஊரில் உள்ள விநாயகர் கோவிலில் அதிகாலை 04.00 மணியளவில் மகமாயி நாடகம் நடைபெற்று கொண்டு இருந்தது. நான் நிகழ்ச்சியை பார்த்து கொண்டு இருந்தேன். அப்போது அங்கு முத்துகுமார் சேரில் உட்கார்ந்து கொண்டு இருந்தார். அப்போது எதிரி பிரபு முத்துகுமாரை பார்த்து நீ ஏன் சேரில் உட்கார்ந்து இருக்க சேரை குடு என்று கேட்டார். அதற்கு முத்துகுமார் நான் சேரில் உட்கார்ந்தால் உனக்கு என்ன பிரச்சனை என்று கேட்டார். அதற்கு எதிரி பிரபு நான் சொல்ல சொல்ல சேரில் உட்கார்ந்திருக்க என்று சொல்லி முத்துகுமாரை சேரில் இருந்து கீழே தள்ளிவிட்டு அதே சேரை எடுத்து முத்துகுமாரின் தலையில் அடித்தார். அதனால் முத்துகுமாருக்கு தலையில் காயம்

ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. முத்துகுமார் பயந்து கொண்டே வந்து பிரபு சேரால் அடித்துவிட்டதாக சொன்னார். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக காயமுற்ற முத்துகுமாரை புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முத்துகுமார் எனது நாத்தனார் மகன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். அப்போது சுமார் 100 நபர்கள் நாடகம் பார்த்து கொண்டு இருந்தார்கள் என்றால் சுமார் 30-40 நபர்கள் இருந்தார்கள். மேடை அமைத்து தான் நாடகம் நடைபெறும் என்றால் எங்கள் ஊரில் நாடகம் மேடை உள்ளது. அதில் தான் நடைபெறும். எனது வீட்டில் இருந்து நாடகம் நடைபெற்ற இடத்திற்கு சுமார் 1/2கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் பார்த்தபோது முத்துகுமார் அழுது கொண்டு இரத்தம் ஒழுகி வந்தார் என்றால் சரிதான். அ.சா.2 நாகராஜ் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது கொழுந்தன் ஆவார். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் முத்துகுமார் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த ஒரு சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி பிரபுக்கும் முத்துகுமாருக்கும் ஏற்கனவே முன்விரோதம் ஏதும் இல்லை என்றால் சரிதான்.
மறுவிசாரணை-இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.06.02 17:31:29 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**